**உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்**

# இருதயம் 3



Compiled by
**P. Isaac Chandran**

ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப்போலிருக்கிறது: அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்.
நீதிமொழிகள் 21:1

உன் இருதயம் என் வார்த்தைகளைக் காத்துக்கொள்ளக்கடவது: என் கட்டளைகளைக் கைக்கொள், அப்பொழுது பிழைப்பாய்.
நீதிமொழிகள் 4:4

உங்கள் இருதயம் வஞ்சிக்கப்படாமலும், நீங்கள் வழிவிலகி அந்நிய தேவர்களைச் சேவித்து அவர்களை நமஸ்கரியாமலும் இருக்கும்படி எச்சரிக்கையாயிருங்கள்.
உபாகமம் 11:16

என் சாமர்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்மபாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிருந்து,

உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக, அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்.
உபாகமம் 8:17,18

ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்போது,

நல்யோசனை உன்னைக் காப்பாற்றும், புத்தி உன்னைப் பாதுகாக்கும்.
நீதிமொழிகள் 2:10,11

கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக: நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்.
நீதிமொழிகள் 3:3

மாறுபாடுள்ள இருதயமுள்ளவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்: உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்.
நீதிமொழிகள் 11:20

நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்: விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும்.
நீதிமொழிகள் 13:12

வெள்ளியைக் குகையும், பொன்னைப் புடமும் சோதிக்கும்: இருதயங்களைச் சோதிக்கிறவரோ கர்த்தர்.
நீதிமொழிகள் 17:3

மாறுபாடான இருதயமுள்ளவன் நன்மையைக் கண்டடைவதில்லை: புரட்டு நாவுள்ளவன் தீமையில் விழுவான்.
நீதிமொழிகள் 17:20

தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்: ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான்.
நீதிமொழிகள் 28:26

நீதியை அறிந்தவர்களே, என் வேதத்தை இருதயத்தில் பதித்திருக்கிற ஜனங்களே, எனக்குச் செவிகொடுங்கள், மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலும், அவர்கள் தூஷணங்களால் கலங்காமலும் இருங்கள்.
ஏசாயா 51:7

சேனைகளின் கர்த்தாவே, உள்ளிந்திரியங்களையும் இருதயத்தையும் சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதியே, நீர் அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிறதைப் பார்ப்பேனாக, என் வழக்கை உமக்கு வெளிப்படுத்திவிட்டேன் என்றேன்.
எரேமியா 11:20

மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
எரேமியா 17:5

ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும், பொய்யாணையின்மேல் பிரியப்படாமலும் இருங்கள். இவைகளெல்லாம் நான் வெறுக்கிற காரியங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
சகரியா 8:17

அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படி, அவர்கள் எந்நாளும் எனக்குப் பயந்து, என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்.
உபாகமம் 5:29

அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.
1 பேதுரு 3:4

இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.
2 கொரிந்தியர் 4:6

அழிவு வருமுன் மனுஷருடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும்:மேன்மைக்கு முன்னானது தாழ்மை.
நீதிமொழிகள் 18:12

ஆம்! ராஜாவின் இருதயத்தை கர்த்தர்தமது சித்தத்தின்படி திருப்புகிறவர் இருதயத்தை சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதியாக உங்களுக்கு நீதியைச் சரிக்கட்டுவாராக.

***************************